

கிண்டி, அண்ணா பல்கலைக்கழக விவேகானந்தா அரங்கில் நேற்று (11.11.2024) குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தமிழ்நாடு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின், தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம் சார்பில் நடைபெற்ற, புத்தாக்க கண்டுபிடிப்பு கண்காட்சியை துவக்கி வைத்து பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், புதுதில்லி, யுனிசெப் திருமதி. மானசா பிரியா வாசுதேவன். தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் இயக்குநர் ரா.அம்பலவாணன் , தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் துணை இயக்குநர் நா.அ.கமலகண்ணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சென்னை பிராட்வே பேருந்து நிலையம்

# ரூ.822.70 கோடியில் புதிய பல்நோக்கு ஒருங்கிணைந்த பேருந்து நிலையமாக அமைகிறது!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

*சென்னை, நவ.12-*

முதலமைச்சர் அவர்கள் எப்படி ஒட்டுமொத்த இந்தியாவிலேயே முதன்மையான முதலமைச்சராக விரைவாக திட்டங்களை, விரைவான முன்னெடுப்புகளை எடுக்கின்ற முதல்வராக திகழ்கிறாரோ, அவருடைய வேகத்திற்கு ஏற்றார் போல் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தினுடைய செயல்பாடும் வேகமடையும், எவ்வளவு குறுகிய காலத்தில் முடிக்க முடியுமா அவ்வளவு குறுகிய காலத்தில் அனைத்து திட்டங்களும் முடிக்கப்படும் என்றும், சென்னை, பிராட்வே பேருந்து நிலையம் ரூ.822.70 கோடி மதிப்பீட்டில் புதிய பல்நோக்கு ஒருங்கிணைந்த போக்குவரத்து பேருந்து நிலையம் மற்றும் குறளகம் பணிகள் விரைவில் துவக்கப்படும் என்றும் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (11.11.2024) சென்னை, பிராட்வேயில் அமைந்துள்ள பழைய பேருந்து நிலையத்தில் ரூ.822.70 கோடி மதிப்பீட்டில் புதிய பல்நோக்கு ஒருங்கிணைந்த போக்குவரத்து பேருந்து நிலையம் மற்றும் குறளகம் கட்டப்படவுள்ள இடத்தினையும், பயணிகளின் வசதிக்காக மாற்று ஏற்பாடாக தற்காலிக பேருந்து நிலையம் அமைப்பதற்காக இராயபுரம் மண்டலம், வார்டு 60, இப்ராகிம் சாலையில் 3 ஏக்கர் பரப்பளவு கெண்ட துறைமுகத்திற்கு செந்தமான காலி இடத்தினையும், வார்டு55, ஏழு கிணறு, திடீர் நகர், குளோப் திருமண மாளிகை அருகில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் துறைமுகம் சட்டமன்ற தொகுதி நிதியிலிருந்து ரூ.95 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய பன்னோக்கு மையத்தையும் மற்றும் வால்டாக்ஸ் ரோடு, ஒத்த வாடை தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் ரூ.8.55 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய சமுதாய நலக்கூடத்தையும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

முதலமைச்சர் அவர்கள் கடந்த மார்ச் மாதம் 14ஆம் தேதி சென்னை தங்க சாலையில் வடசென்னை வளர்ச்சி திட்டம் துவக்கப்பட்டதால், முதல்வர் அவர்களால் ஒட்டுமொத்த அரசு துறைகளும் ஒருங்கிணைந்து வடசென்னை வளர்ச்சிப் பாதையில் கொண்டு போவதற்கும் மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் பல்வேறு வகையில் குழுக்களை அமைத்து அந்த மக்களினுடைய தேவைகளை அறிந்து அந்த தேவைகளை முழுமையாக நிறைவேற்றி கொடுப்பதற்குண்டான அந்த பணிகளை முன்னெடுத்திருப்பதை மக்களும் ஊடகத்துறையும் நன்கு அறிவீர்கள்.

அந்த வகையில் 75 ஆண்டுகளுக்கு மேலாக சென்னை என்றாலே பாரிமுனை தான் மையப்பகுதி என்பார்கள். அந்த காலங்களில் ஜார்ஜ் டவுன் என்று அழைக்கப்படுகின்ற இந்த பகுதிகளில் சுதந்திரம் அடைந்த பிறகு பல்வேறு காலகட்டங்களில் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டாலும் மக்களுடைய வாழ்வாதார மாற்றம் ஏற்படவில்லை என்ற கருத்தில் கொண்டு வடசென்னை வளர்ச்சி திட்டத்தில் முதல்வர் அவர்களின் நேரடி கண்காணிப்பில் எடுக்கப்பட்ட பல்வேறு பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

**சென்னை மாநகராட்சியின் பங்களிப்பு!**

அதில் ஒரு பகுதியாக நம்முடைய பிராட்வே பேருந்து நிலையத்தை மேம்படுத்தப்படும் என்று தேர்தல் அறிக்கையில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளதால் அந்த வகையில் இன்றைக்கு சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL) வழியாக அரசினுடைய பங்கு 200 கோடி ரூபாயும், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் 115 கோடி ரூபாயும், டுபிட்கோ (TUFIDCO) மூலம் 506 கோடி ரூபாயும் மற்றும் சென்னை மாநகராட்சியின் உடைய பங்களிப்போடு சேர்த்து சுமார் 822.70 கோடி ரூபாய் செலவில் இந்த பிராட்வே பேருந்து நிலையம் உருவாக்கப்பட இருக்கின்றது.

குறளகத்தில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற அதற்கென்று தனியாக 9 மாடி கட்டிடமும், பிராட்வே பஸ் நிலையத்திற்கு தரைதளம் மற்றும் இரண்டு தளங்கள் அடங்கிய 8 மாடி பேருந்து முனையமும் அதில் வணிக வளாகங்களும் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தப் பணிகளை வெகுவாக முடக்கிவிட முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார். சென்னை பெருநகர மாநகராட்சி ஆணையாளர் குமரகுருபரன் அவர்களும், துறை சார்ந்த அதிகாரிகளும் இன்று களஆய்வினை மேற்கொண்டோம். அந்தப் பகுதியில் 200க்கும் மேற்பட்ட கடைகள் இருக்கின்றன. அந்த கடைகளை அவர்களுடைய வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு அவர்களுக்கு மாற்று இடத்தை கொடுப்பதற்கு ஆய்வு செய்திருக்கின்றோம். முன்கூட்டியே இது சம்பந்தமாக அந்த வியாபார பெருமக்களை அழைத்து மூன்று முறை பெருநகர மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் கூட்டங்களை நடத்திருக்கின்றார்.

**சாலையோர மக்களுக்கு குடியிருப்புகள்!**

அந்தப் பகுதியில் சாலை ஓரமாக வசிக்கின்ற மக்கள் தங்களுக்கு நிரந்தர குடியிருப்புகள் இல்லாததால் 20 ஆண்டுகள், 30 ஆண்டுகள், 40 ஆண்டுகள் என்று சாலை ஓரமாக பெரும்பாலான மக்கள் வசித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுடைய கணக்கினை எடுத்து இருக்கின்றோம். தற்போது வரையில் சுமார் 41 நபர்கள் குடியிருப்புக்காக கண்டறியப்பட்டிருக்கின்றது. மேலும் ஏதாவது விடுபட்டு இருந்தால் முறையான ஆவணங்கள் சமர்ப்பித்தால் அவர்களையும் அந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொண்டு அவர்களுக்கும் மாற்று இடம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதோடு இல்லாமல் சாலையோர வசிக்கின்ற மக்களை பற்றி எந்த காலத்திலும் சிந்தித்ததில்லை. முதலமைச்சர் அவர்கள்தான் குடிசை மாற்று குடியிருப்புகளை 40 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட சேதம் அடைந்த நிலையில் இருக்கின்ற குடியிருப்புகளை மறுக்கட்டுமான பணி மேற்கொண்டு வருகின்றனர்.

நான்கடுக்கு மாடிகளுடன் இருக்கக்கூடிய அந்த குடியிருப்புகளின் பரப்பளவு குடும்பத்திற்கு 225 சதுர அடி என்கின்ற நிலையை மாற்றி 400 சதுர அடி என்கின்ற வகையில் இப்பொழுது மறுக்கட்டுமான பணிகள் நடைபெறுவதற்கு பல்வேறு கட்டப்பணியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த வகையில் ஏற்கனவே இருக்கின்ற வீடுகளை விட கூடுதலாக குடியிருப்புகளை உருவாக்கும் அந்த குடியிருப்புகளில் சாலை ஓரம் வசிக்கின்ற பொருளாதாரத்தில் நலிவுற்றவர்கள், வாழ்வாதாரம் இல்லாதவர்களுக்கு அந்த குடியிருப்புகளை ஒதுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு துறைமுகம் தொகுதியில் மட்டும் நம்முடைய வாட்டர் பேசின் என்று சொல்லப்படுகின்றன வால்டாக்ஸ் ரோடு, தண்ணீர் தொட்டி தெருவில் 750 குடியிருப்புகளும், அதேபோல் ஸ்டான்லி மருத்துவமனைக்கு பக்கத்தில் அமைந்திருக்கின்ற பொதுப்பணித் துறைக்கு சொந்தமான பகுதியிலே 750 குடியிருப்புகள் என்று மொத்தம் 1,500 குடியிருப்புகள் கட்டுவதற்கு டிசம்பர் 14-ஆம் தேதி முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களாலே அடிக்கல் நாட்ட இருக்கின்றார்.

இப்படி வடசென்னை வளர்ச்சி திட்ட பணிகளில் 218 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. சுமார் 5,044 கோடி ரூபாய் அளவிற்கு இந்த பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றனர் முழுவதுமாக சென்னையை சார்ந்த பணிகள் என்பதால் பெருநகரத்தின் உடைய மாநகராட்சி ஆணையாளர் அவர்களும், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னைப் பெருநகர வளர்ச்சி குழுமத்தின் உறுப்பினர் செயலாளர் அன்சுல் மிஸ்ரா, அதேபோல் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியத்தின் மேலாண்மை இயக்குனரும், அதேபோல் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மேலாண்மை இயக்குனர், அதேபோல் வருவாய் துறை, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டுத்துறை போன்ற அனைத்து துறைகளும் ஒன்றிணைந்து மாதந்தோறும் முதல்வர் அவர்கள் தலைமையிலே தமிழகத்தினுடைய துணை முதல்வர் அவர்கள் பங்கேற்கின்ற பல்வேறு ஆய்வுக் கூட்டங்களை தொடர்ந்து நடத்தி வருகின்றார்கள். எடுத்துக் கொள்ளப்படுகின்ற பணிகள் குறிப்பிட்ட ஒரு சில பணிகளை தவிர்த்து மற்ற அனைத்து பணிகளையும் 2025 டிசம்பருக்குள் முடிக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கின்றார்.

ஆகவே இந்த பணிகளை நிறைவுப்படுத்துவதற்காக தான் கால நேரங்களை பார்க்காமல் இரவு பகல் என்று கருதாமல் தொடர்ந்து ஆட்சி அதிகாரத்தில் இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகளோடு அரசுத்துறை அதிகாரிகளும் ஒன்றிணைந்து இருப்பதால் இந்த பணிகள் வேகமாக நடந்து வடசென்னை வாழ் மக்களுடைய அடிப்படை ஆதாரங்கள் காட்டப்படும் என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் சுமார் 822.70 கோடி ரூபாய் செலவில் இந்த பிராட்வே பேருந்து நிலையம் உருவாக்கப்பட இருக்கின்றது. இந்த திட்டத்தில் ஏற்கனவே தங்களுடைய வாழ்வாதாரமாக நம்பி தொழில் செய்பவர்களுடைய பாதுகாப்பையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். அடுத்து அங்கே குடியிருக்கின்ற மக்களுக்கும் மாற்று இடங்களை ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த பேருந்து நிலையத்தின் செயல்பாட்டில் இருக்கின்ற பேருந்துகள் அந்த பேருந்துகளில் பயணிக்கின்ற பயணிகள் உடைய நன்மையையும் கருத்தில் கொண்டு அனைத்திற்கும் மாற்று இடம் ஏற்பாடு செய்து இந்த திட்டத்தை துவங்கப்பட இருப்பதால், எவ்வளவு விரைவாக இந்த திட்டத்தை கொண்டு செல்ல முடியுமோ முதலமைச்சர் அவர்கள் எப்படி ஒட்டுமொத்த இந்தியாவிலேயே முதன்மையான முதலமைச்சராக விரைவாக திட்டங்களை, விரைவான முன்னெடுப்புகளை எடுக்கின்ற முதல்வராக திகழ்கிறாரோ அவருடைய வேகத்திற்கு ஏற்றார் போல் இந்த திட்டத்தினுடைய செயல்பாடு வேகமடையும், எவ்வளவு குறுகிய காலத்தில் முடிக்க முடியுமா அவ்வளவு குறுகிய காலத்தில் திட்டத்தை முடிக்கப்படும்.

இவ்வாறு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின்போது பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையர் (பணிகள்) வ.சிவகிருஷ்ணமூர்த்தி, வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத்தலைவர் ஸ்ரீராமுலு, மண்டல அலுவலர் திருமதி.பரிதா பானு, செயற்பொறியாளர் சொக்கலிங்கம், மெட்ரோ இரயில் நிறுவன திட்ட மேலாளர் க. தணிகை செல்வன், மாமன்ற உறுப்பினர்கள் ஆசாத், தாஹா நவீன், ராஜேஷ் ஜெயின் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.



திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திருத்தணி மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும் திருத்தணி சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ்.சந்திரன் மாவட்ட ஆட்சியர் பிரபு சங்கரை சந்தித்து திருத்தணி தொகுதிக்குட்பட்ட பொதட்டூர்பேட்டை பணிமனை மற்றும் தரை தளம் அமைக்கவும் அத்திமாஞ்சேரிபேட்டை நெல்லிக்குன்றம் மாலை பகுதியில் பாதை அமைக்க வேண்டும்; சொரக்காபேட்டை பகுதியில் இந்தியன் வங்கி கிளை அமைக்க பரிந்துரை செய்ய வேண்டும்; மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர வாகனம் வழங்க வேண்டும்; தொகுதிகளில் உள்ள வீட்டுமனை பட்டா சாலை வசதி மழைநீர் கால்வாய் அடிப்படை வசதிகளை செய்து தர வேண்டும் என்று கோரிக்கை மனுக்களை வழங்கினார்.

## துணை முதல்வர் – இளைய தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளான நவம்பர் 27 அன்று

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் ஆதரவற்றோர் - முதியோர் - சிறுவர் இல்லங்களில் உணவு வழங்கல்!

### மாவட்ட செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



திராவிட இயக்கத்தின் 5ஆம் தலைமுறை தலைவர் – திராவிட இணத்தின் இளஞ்சூரியன் எங்கள் எழுச்சிமிகு இளைய தலைவர் – துணை முதல்வர் – உதயநிதிஸ்டாலின் அவர்களின் 47வது பிறந்தநாளான நவம்பர் 27 அன்று மனிதநேயம் வளர்க்கும் விதமாக காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள கீழ்கண்ட ஆதரவற்றோர், முதியோர், சிறுவர் இல்லங்களில் உள்ள ஆதரவற்றோர், முதியோர், சிறுவர்களுக்கும், மன வளர்ச்சி குன்றிய இல்லங்களில் உள்ள மனவளர்ச்சி குன்றியவர்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும், பரனூர் அரசு மறுவாழ்வு இல்லத்தில் உள்ள தொழு நோயாளிகளுக்கும் பகல் உணவு வழங்கப்பட உள்ளது.

**நாள் : 27–11–2024**

| வ. எண் | ஆதரவற்றோர் இல்லம் பெயர் இடம் | நிகழ்ச்சி ஏற்பாடு |
|---|---|---|
| 1 | கிருபா இல்லம், படப்பை | குன்றத்தூர் தெற்கு ஒன்றியம், படப்பை ஊராட்சி |
| 2 | பிரேமவாசம்ஆதரவற்றோர் இல்லம், கெருகம்பாக்கம் | குன்றத்தூர் வடக்கு ஒன்றியம், கெருகம்பாக்கம் ஊராட்சி |
| 3 | ஆலயம் சிறுவர் இல்லம் பரணிபுத்தூர் | குன்றத்தூர் வடக்கு ஒன்றியம், பரணிபுத்தூர் |
| 4 | லிட்டில் டிராப்ஸ் ஆதரவற்றோர் இல்லம், அய்யப்பந்தாங்கல் | குன்றத்தூர் வடக்கு ஒன்றியம், அய்யப்பந்தாங்கல் ஊராட்சி |
| 5 | மனவளர்ச்சி குன்றியோர் மகிமை இல்லம், செங்கல்பட்டு | செங்கல்பட்டு நகரம் |
| 6 | அரசுமறு வாழ்வு இல்லம், பரனூர் | காட்டாங்குளத்தூர் தெற்கு ஒன்றியம் வீராபுரம் ஊராட்சி |
| 7 | சிவானந்த குருகுலம் காட்டாங்குளத்தூர் | மாவட்ட இளைஞர் அணி |
| 8 | வில்லியம்ஸ் ஊனமுற்றோர் பள்ளி, வண்டலூர் | காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றியம் வண்டலூர் ஊராட்சி |
| 9 | யூத்கிறிஸ்டியன் சிறுவர் இல்லம், ஊரப்பாக்கம் | காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றியம் ஊரப்பாக்கம் ஊராட்சி |
| 10 | இந்தியன்கிறிஸ்டியன் மிஷன் சிறுவர் இல்லம், ஊரப்பாக்கம் | |
| 11 | சுப்பையாமடம் ஆதரவற்றோர் இல்லம், திருக்கழுக்குன்றம் | திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியம் பேரூர் |
| 12 | குட்லக்சென்டர் ஆதரவற்றோர் சிறுவர் இல்லம், தாம்பரம் | பெருங்களத்தூர் வடக்கு பகுதி |
| 13 | ஆதரவற்றோர் இல்லம், சேலையூர், தாம்பரம் | தாம்பரம் மேற்கு பகுதி |
| 14 | சாரதாசக்திபீடம் ஆதரவற்றோர் இல்லம், பெருங்களத்தூர் | பெருங்களத்தூர் தெற்கு பகுதி |
| 15 | பவுசியதீபம் மனவளர்ச்சி குன்றியோர் பள்ளி, பெருங்களத்தூர் | |
| 16 | ஆதரவற்றோர் முதியோர் இல்லம், பீர்க்கன்கரணை | |
| 17 | அன்னை கருணை இல்லம் ராஜகீழ்ப்பாக்கம் | செம்பாக்கம் தெற்கு பகுதி |
| 18 | பாபுஜிஇல்லம், சிட்லப்பாக்கம். | |
| 19 | ரீச் ஆதரவற்றோர் கருணை இல்லம், மாடம்பாக்கம். | தாம்பரம் கிழக்கு பகுதி |
| 20 | அன்பகம் மனநலம் குன்றியோர் இல்லம், பனங்காட்டுப்பாக்கம் | திருப்போரூர் வடக்கு ஒன்றியம் |
| 21 | அட்சயம் இல்லம், முடிச்சூர் | புனிததோமையார்மலை வடக்கு ஒன்றியம் முடிச்சூர் ஊராட்சி |
| 22 | ஆதரவு இல்லம், முடிச்சூர் | |
| 23 | மாரநாதா ஆதரவற்றோர் பள்ளி, மறைமலைநகர் | மறைமலைநகர் நகரம் |
| 24 | உதவும் உள்ளங்கள் முதியோர் இல்லம், கோகுலபுரம், மறைமலைநகர் | |
| 25 | இன்பார்ம் மன வளர்ச்சி குன்றியோர் இல்லம் வல்லாஞ்சேரி, மறைமலைநகர் | |
| 26 | விதை ஆதரவற்றோர் குழந்தைகள் காப்பகம், வி.பி.ஆர் சத்திரம், திருப்பெரும்புதூர் | திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம் திருப்பெரும்புதூர் பேரூர் |
| 27 | நியூலைப் ஆதரவற்றோர் முதியோர் இல்லம், எறையூர் | திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம் – எறையூர் ஊராட்சி |
| 28 | ஆதரவற்ற குழந்தைகள் நம்பிக்கை இல்லம், வெங்காடு | திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம் – வெண்காடு ஊராட்சி |
| 29 | புனித தோமையர் குழந்தைகள் பாதுகாப்பு இல்லம்,தண்டலம் | திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம் – தண்டலம் ஊராட்சி |
| 30 | வெண்பா முதியோர் இல்லம், மாமல்லபுரம் | மாமல்லபுரம் நகரம் |
| 31 | பாபாகுருகுலம், பொழிச்சலூர் | புனித தோமையார்மலை வடக்கு ஒன்றியம் பொழிச்சலூர் ஊராட்சி |

எனவே, அந்தந்த மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர் கிளைக் கழகச் செயலாளர்கள்ஆதரவற்றோர் இல்லங்களில் இந்த அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை சிறப்பான முறையில் ஏற்பாடுசெய்து மிகவும் எழுச்சியுடன் இந்த ஆதரவற்றோர் இல்லங்களில் உள்ள அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கிடும் படி கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் **தா.மோ.அன்பரசன்,**

செயலாளர் – காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.



முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவில் நடைபெற்ற உயர்நீதிமன்ற நீதி அரசர் ஷமிம் அஹமத் அவர்களின் இல்ல திருமண விழாவில் தமிழ்நாடு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி கலந்து கொண்டு வாழ்த்தினார். அரசு குற்றவியல் தலைமை வழக்கறிஞர் அசன் முகம்மது ஜின்னா உடன் உள்ளார்.